# LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

**B.A.** DEGREE EXAMINATION – **TAMIL LITERATURE**

FIRST SEMESTER – **NOVEMBER 2019**

**UTL 1502 – HISTORY OF TAMIL LITERATURE**

Date: 01-11-2019 Dept. No. Max. : 100 Marks
Time: 09:00-12:00

**பகுதி - அ** (10 X 2 = 20 மதிப்பெண்கள்)

**விடையொன்றுக்கு 20 சொற்களில் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**

01. சங்க இலக்கியங்கள் எவை?
02. தொல்காப்பியம் எத்தனை இயல்களைக் கொண்டது? எத்தனை நூற்பாக்களைக் கொண்டது?
03. ஆற்றுப்படை என்றால் என்ன? திருமுருகாற்றுப்படையின் ஆசிரியர் யார்?
04. ஒன்பதாம் திருமுறையில் மிக அதிகமான பதிகங்களைப் பாடியவர் யார்? திருப்பல்லாண்டு பாடியவர் யார்?
05. பிள்ளைத்தமிழின் அமைப்பு - விளக்குக.
06. குமரகுருபரர் இயற்றிய நூல்களைக் குறிப்பிடுக.
07. தமிழில் தோன்றிய முதல் நிகண்டு எது? அதன் வேறுபெயர் என்ன?
08. நாட்டுப்புறப் பாடல்களின் வகைகளை எழுதுக.
09. கவிஞர் வாலியின் இயற்பெயர் என்ன? அவரது நூல்கள் நான்கினை எழுதுக.
10. கவிஞர் இன்குலாப் - குறிப்பு வரைக.

**பகுதி - ஆ** (5 X 7 = 35 மதிப்பெண்கள்)

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒன்றரைப்பக்க அளவில் விடையளிக்க.**

11. சங்க இலக்கியத்தின் ‘அகம்’, ‘புறம்’ சிறப்புகளை எடுத்துரைக்க.
12. வைணவ இலக்கியம் குறிப்பு வரைக.
13. காரைக்கால் அம்மையை ‘அம்மையே’ என்று அழைத்தவர் யார்? ஏன்?
14. நாட்டுப்புற மக்களின் நுண்மையான அறிவின் வெளிப்பாடே ‘பழமொழி’ என்பதைத் தொல்காப்பியர் எவ்வாறு வரையறை செய்கிறார்?
15. ஐம்பெரும் காப்பியங்கள் எவை? விளக்குக.
16. பௌத்தர்களின் இலக்கியப் பணியினைக் குறித்து எழுதுக.
17. சமணர்களின் தமிழ்ப்பணி குறித்து எழுதுக.

**பகுதி - இ** (3 X 15 = 45 மதிப்பெண்கள்)

**மூன்றுபக்க அளவில் விடையளிக்க.**

18. தொல்காப்பியம் குறித்து கட்டுரைக்க.

**( அல்லது )**

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் ‘அற இலக்கியங்கள்’ என்பதை ஆராய்க.

19. பிள்ளைத்தமிழ் வளர்ச்சியடைந்துள்ள பான்மையை விவரிக்க.

**( அல்லது )**

தமிழ் நாட்டுப்புறக் கலைகளில் டாக்டர் கே.ஏ. குணசேகரன் ஆற்றிய பணிகள் குறித்து ஆய்க.

20. பதினெண் சித்தர்கள் குறித்து விவரிக்க.

**( அல்லது )**

கிறித்தவர்கள் தமிழுக்காற்றிய தொண்டு குறித்து விவரிக்க.

*******